**கொடகவெல பிரதேச சபையின் - 2023**

**-----------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடகவெல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கொடகவெல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு காணி, ஒரு விளையாட்டு மைதானம் மற்றும் 02 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 6,915,318 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 02 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 165,970 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஒரு ஜீப் வண்டி மற்றும் 58 மேசை கிளாஸ்களின் பெறுமதி ரூபா 6,406,235 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவுகள் ரூபா 39,080 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 03 காணிகள் ரூபா 700,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்பிக்கப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்படும் வரை அவற்றின் உறுதிப் பெறுமதியை எதிர்காலத்தில் கணக்கீடு செய்வேன். | சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2007 - 2021 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம் தொடர்பாக ரூபா 1,845,769 தொகையான காலங்கடந்த வைப்புக்களை நிதிப்பிமாணம் 571(3) இன் பிரகாரம் மீளச் செலுத்துவதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வைப்புக்களைத் தீர்த்துவைப்பதற்கு தேவையான முயற்சி எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா 11,429,322 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,287,136 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா |
| வீத வரியும் வரியும் | 6,121,029 | 6,505,369 | 7,491,854 | 2,491,610 | 5,935,099 | 6,392,614 | 5,706,053 | 4,107,494 |
| வாடகை | 16,890,506 | 13,983,546 | 12,790,137 | 4,741,187 | 16,974,811 | 11,363,452 | 10,111,641 | 3,909,026 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,824,200 | 2,216,388 | 2,216,388 | - | 1,974,000 | 1,909,928 | 1,909,928 | - |
| ஏனைய வருமானம் | 4,659,184 | 2,154,795 | 1,707,976 | 424,582 | 4,780,466 | 1,549,773 | 4345572 | 549,475 |
| மொத்தம் | 29,494,919 | 24,860,098 | 24,206,355 | 7,657,379 | 29,664,376 | 21,215,767 | 22,073,194 | 8,565,995 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,445,968 நிலுவையான வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளை மிகைத்த பழைய ரூபா 681,850 காணப்பட்டது. | வரி செலுத்தாதவர்களுக்கு சிகப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவைப் பணம் நடமாடும் சேவைகள் மூலம் அறவிடப்படும். | நிலுவை வருமானம் தாமதமின்றி அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ரூபா 163,099 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 152,244 மீதி காணப்பட்டது. | ஏக்கர் வரியை மெய்மையாய்வு செய்ததன் பின்னர் அறவிடமுடியாத மீதிகளை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொதுப் பயன்பாட்டுச் சேவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் அமுல்ப்படுத்தப்பட்ட இரண்டு நீர் செயற்திட்டங்களின் நீர் குடிப்பதற்க பொருத்தமற்றது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் சுத்திகரிக்கப்படாது தொடர்ந்தும் பகிர்ந்தளிக்கப்பட்டன. | அதற்காக நிர்த்தாங்கியும் நிரப்பும் உபகரணங்களையும் பொருத்துவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நீரினை சுத்திகரித்து பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம் வீதிகள் மற்றும் மழைநீர் வடிகாண்களை பராமரிக்கும் நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் 15 சதவீதம் அளவிற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிதி ஏற்பாடு இல்லாமை மற்றும் தொழில்நுட்ப உற்பத்தியாளர்களின் பற்றாக்குறை இதற்கு காரணமாக இருந்தது. | பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்காக முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். |

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2160 மெட்ரிக் தொன் திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டின் போது ஆளணியினர் சம்பளம், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 18,319,269 செலவு செய்யப்பட்டிருந்தும் அக்கழிவுப் பொருட்கள் முறையற்ற வகையிலும் சுற்றாடலுக்குச் சாதகமான நடைமுறைகள் இன்றியும் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. | போதியளவு வசதிகள் இல்லாமை இதற்கு காரணமாக இருந்தது. 2024 ஆம் ஆண்டிலிருந்து கழிவுப் பொருள் மீள்சுழற்சி செயற்பாடு மேற்கொள்ளப்படும். | திண்மக் கழிவுப் பொருட்கள் முறைப்படியாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 30 ஆண்டுகளுக்கு நிலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 02 காணித் துண்டுகளிலிருந்து 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 375,859 நிலுவைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. தாமதக் கட்டணத்தை அறவீடு செய்யும் முறைமை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,852,255 தாமதக் கட்டணத்தை பதிவழிப்பதற்கு சபை திர்மானம் எடுத்திருந்தது. | இதற்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கைகளில் தாமதக் கட்டணம் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை என தெரிவித்து கொடுப்பனவு மறுக்கப்பட்டதன் காரணமாக அம்மீதி சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வாடகை உடன்படிக்கையை முறைமைப்படுத்துவதற்கு நடவபடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணக்கமற்ற வகையில் 06 சாரதிகள் 2024 சனவரியிலிருந்து 2024 பிப்ரவரி வரையான காலத்தில் சேவை நிலையத்திற்கு | சாரதிகள் பல சந்தர்ப்பங்களில் வெளிக்கடமைகளுக்காக வெளியே செல்லும் போதும் திரும்பி வரும் போதும் அலுவலகம் மூடப்பட்டுள்ளதனால் | வருகை மற்றும் வெளிச் செல்லலினைப் பதிவுசெய்தல், மேலதிக நேர வேலைப்படிகளை கொடுப்பனவு செய்தல், ஓட்டக்குறிப்புக்களைப் பராமரித்தல் என்பன |

| | | |
|---|---|---|
| சமூகமளித்தலினை மாத்திரம் பதிவுசெய்திருந்தனர். சாரதிகளுக்கு மேலதிக நேர வேலைப் படியினைச் செலுத்தும் போது ஓட்டல் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட நேரங்கள் மாத்திரம் தொடர்புபடுத்தப்பட்டிருந்தும் அந்த நேரங்களுக்கும் வாகனங்கள் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலினை பதிவுசெய்கின்ற பதிவேட்டில் குறிப்பிட்ட நேரங்களுக்கும் இடையே வித்தியாசம் காணப்பட்டது. வாகனங்களைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக செயலாளரினால் அனைத்து ஓட்டல் குறிப்புக்களிலும் கையொப்பமிடப்பட்டிருந்தன. | இவ்வாறான குறைபாடு ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு வருகை மற்றும் வெளிச்செல்லல் சம்பந்தமாக பதிவுசெய்வதற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. | முறைமைப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.6 வாகன முறைமையின் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெகோ இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2023 யூலை வரையும் அது திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் அக்காலத்தில் பெகோ இயந்திரத்தினை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்ததனால் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 யூன் வரை ரூபா 2,984,732 செலுத்த வேண்டி ஏற்பட்டது. | தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. சில உதிரிப்பாகங்களை வழங்கச் செல்லும் போது சிறு தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. | திருத்தம் செய்யும் நடவடிக்கையை துரிதப்படுத்தி இயந்திரத்தினை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஜீப் வண்டிக்கு ரூபா 963,920 தொகையான திருத்த வேலைகள் நிறைவேற்றப்படாததனால் 2021 ஆம் அண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | தேவையான உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய 03/2020 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு இணக்கமற்ற வகையில் மாதம்பை மீன் சந்தையிலுள்ள மீன்கடைகளிலிருந்து பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 840,000 அறவிடப்பட்டிருக்காததுடன் 02 கடைகள் உடன்படிக்கையின்றி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே 22 கடைகளிலிருந்தும் 07 களஞ்சிய அறைகளிலிருந்தும் நிலுவையாக இருந்த ரூபா 2,051,100 தொகை 2023 திசெம்பர் வரை அறவிடப்பட்டிருக்டகாததுடன் அவற்றில் 11 கடைகளும் களஞ்சியங்களும் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தன. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்தல் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. நிலுவை வைப்பு பணத்தையும் எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். | நிலுவை வாடகை மற்றும் வைப்பு பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

## 3.8 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கற்பிணித் தாய்கள், விதவை பெண்கள், மற்றும் ஊனமுற்றவர்களுக்காக 05 நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. இதற்காக ஆட்களை தெரிவுசெய்யும் முறைமை மற்றும் வழங்கிய திரவப் பொருள் உதவிகள் தொடர்பான தகவல்கள் எதுவும் இல்லாததனால் வழங்கிய பொருள் உதவி நலன்பெறுனர்களுக்கு கிடைத்துள்ளது என்பது நிச்சயமற்றதாகும். அவ்வாறே ரூபா 97,585 தொகையான பொருட்களுக்காக போலியான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நலன்பெறுனர்களை தெரிவுசெய்தலானது முறையாக இடம்பெற்றுள்ளது. எனினும் கொடுப்பனவு செய்யும் போது சிக்கல் நிலைமை இருந்ததனால் தொடக்க புலனாய்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் தேவையான தகவல்களை விசாரணைகள் முடிவடைந்ததன் பின்னர் வழங்கலாம். | நிகழ்ச்சசித்திட்டங்கள அமுல்ப்படுத்தும் போது சிறந்த உள்ளகக் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். வெளிப்படுத்தப்பட்டுள்ள குறைபாடுகள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.9 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இறக்குவானை நகரத்தில் சிறுவர் பூங்காவினை நிர்மாணிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 533,936 இனை மிகைத்து ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 04 வேலை விடயங்களுக்காக ரூபா 198,535 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் மிகையாகச் செலுத்தியுள்ள ரூபா 50,812 நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து கழித்துக்கொள்வேன். | மிகைக் கொடுப்பனவுகள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பலவின்ன மீகஹமடயாய வீதியின் நிறைவேற்றப்படாத வேலைக்காக ரூபா 90,000 செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது குறைபாடு இடம்பெற்றுள்ளது. விலைப்பட்டியலில் குறிப்பிட்ட அளவினை விட அதிக அளவில் வேலை நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனால் சபைக்கு நட்டம் ஏற்படவில்லை. | மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | எல்பிடிய உல்பத வீதியை நிர்மாணிக்கும் போது கொங்கிரீட் தொடர்பான தரப்பரிசோதனை மேற்கொள்ளப்படாது அதற்காக ரூபா 1,711,356 செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ளதன் பின்னர் அப்பிழையினை சரிசெய்துள்ளேன். | தரப்பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வீதியினை தயார்படுத்தும் போது மிகையாகச் செலுத்தியமையாலும் 03 செயற்திட்டங்களுக்கு சீமெந்து மிகையாக வழங்கியமையாலும் ரூபா 98,586 நட்டம் ஏற்பட்டிருந்தது. | JCB இயந்திர மணித்தியால விலை அதிகரித்திருந்தமையும் கொங்கிரீட் கலவை செய்யும் போது சீமெந்து ஈடுபடுத்தப்பட்ட அளவு மாற்றமடைந்தமையும் இம்மிகைக் கொடுப்பனவிற்கு காரணமாக இருந்தது. | மிகைக் கொடுப்பனவு மீள அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |